முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 993

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.06.2022, சனிக்கிழமை

1. தவமெனும் சித்தியே அரங்கா
   தர்மமாய் வாழும் தேசிகா
   அவனியில் ஆறுமுகன் என் அவதாரமாக
   அற்புதம் நிகழ்த்த வரம் பெற்றுவந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 04 நாள், 18.06.2022 சனிக்கிழமை)
   வரமென அரங்கன் தர்மமே
   வையகத்தை வழி நடத்திக் காக்கும்
3. தரமான அரங்கன் சன்மார்க்கமே
   தகுதியுள்ள ஞானவான்களை உருவாக்கி உலகை மீட்கும்
   மீட்புதரும் ஒரே மார்க்கம் அரங்கன் சன்மார்க்கம்
   மேன்மைதரும் ஒரே மார்க்கம் அரங்கன் தர்மமாகும்
4. நன்மை கருதி உலகோர் அரங்கன் வழி வர
   ஞானவான்களாக சிறந்து ஞானயுகமாற்றம் கண்டு மகிழ்வர்
   தானதர்மபலம் கூட்டி வர தவராஜன் வழி
   தர்மவான்களாக சிறந்தும் உலகோர் ஞானிகளாவர்
5. ஆகவே அரங்கன் வாழ் பிரணவக்குடிலை
   அகிலத்தார் அணுகி தொண்டு செய்து
   சரவணச்சுடரை வணங்கி
   சற்குரு அரங்கன் பால் தீட்சை பெற
6. தீட்சையால் சர்வ சித்திகளும்
   தீட்சைவழி மகா சூட்சுமங்களும்
   மாட்சிமைபட கண்டு உலகோர்
   மண்ணுலகில் ஞானிகளாக சிறப்பர்
7. ஆகவே அரங்கன் தொடர்பு உலகோரை மாற்றும்
   அற்புதம் மிக்க அரங்கன் மார்க்கம்
   ஜெகத்தையே ஞான யுகமாற்றமாக உருவாக்கி
   செப்பிடுவேன் உலகோரெல்லாம் ஞான ஆட்சிக்காலம் படைக்க நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–